தமிழ்நாடு சட்டப் பேரவை.

புதன்கிழமை, 1973 பிப்ரவரி 28.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பெ. சீனிவாசன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. தகவல் கோரல்.

திரு. கே. டி. கே. தங்கமணி கைது செய்யப்பட்டிருப்பது குறித்து.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : ஒரு முக்கியமான விஷயத்தைப் பற்றித் தங்களுடைய அனுமதியின் பேரில் ஒரு பிரச்சினையைக் கிளப்புவதற்கு முற்படுகின்றேன். இந்தச் சபையின் மாண்புமிகு உறுப்பினராகிய திரு. கே. டி. கே. தங்க மணி அவர்கள் கம்யூனிஸ்டுக் கட்சியின் . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்வி நேரத்திற்குப் பிறகு எடுத்துக்கொள்ளலாம். The normal practice is to take it up after Question-Hour.

THIRU R. PONNAPPA NADAR : The normal procedure is that if the Hon. Speaker allows and if the House has no objection, I think I am within my rights and I can raise this matter even before the questions are takenup.........

MR. DEPUTY SPEAKER : Then we have to put it to the decision of the House.........

THIRU N. VEERASAMI : Unless the House permits it.........

THIRU R. PONNAPPA NADAR : Sir, I may be permitted to make my submission. Before the Chair decides it, I have a right to raise this issue and say a few words. I am not going to make an elaborate speech. I will confine myself only to the rights of the hon. Members.........

திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களை, இந்த மன்றத்தினுடைய செலக்ட் கமிட்டிக் கூட்டம் முடிந்து வெளியே சென்றபோது 117, 302 ஆகிய பிரிவுகளின்கீழ் உள்ள குற்றங்களுக்காகக் கைது செய்ததாகப் பத்திரிகைக் குறிப்பிலிருந்து கேள்விப்பட்டேன். நமது விதிமுறைகள் 245, 246 ஆகியவைகளின்படி ஒருவேளை நமது சபாநாயகர் அவர்களுக்கு இதன் தகவல் வந்திருக்கும் என்று கருதுகிறேன். மிக முக்கியமான உரிமையைப் பாதிக்கின்ற ஒரு பிரச்சினையாக இது இருக்கிறது. கிரிமினல் கேசில் கைது செய்யலாம் என்று பாராளுமன்றச் சட்டத்திலே இருந்தாலும், இந்த பட்ஜெட் தொடர்க் கூட்டத்தில் ஒரு கட்சியின் தலைவராக இருக்கின்ற—அதுவும் முக்கிய உறுப்பினராக இருக்கின்ற—அன்னாரைப் போன்ற பெரியார்களைக் கைது செய்வதற்கு இந்த மாதிரியான நடவடிக்கை மேற்கொண்டது வருத்தத்திற்கும் வேதனைக்கும் உரியது என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப் பட்டவனாக இருக்கிறேன்.

ஏனென்றால், இந்த மாதிரி பட்ஜெட் நடந்து கொண்டிருக்கிற நேரத்தில் . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்வி நேரத்திற்குப் பிறகு நாம் எடுத்துக் கொள்ளலாம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : வேண்டுமென்றே, இந்த மன்றத்தில் அவர் செயலாற்றுவதைத் தடுப்பதற்குத் திட்டமிட்ட சதிச் செயல் என்று நான் கூறி, இது குறித்து நாங்கள் எங்களுடைய வெறுப்பினைத் தெரிவிக்கின்றோம் என்று சொல்கிறேன். இது எங்களுடைய உரிமைகளைப் பாதிக்கின்றது. ஒருவேளை கே. டி. கே. அவர்கள் இன்று கைது செய்யப்படலாம். நாளை வேறு கட்சியைச் சார்ந்தவர்கள் கைது செய்யப்படலாம். இந்த மன்ற உறுப்பினர்களுடைய சுதந்திரமான உரிமைகளையும் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு தங்களைச் சார்ந்தது ; ஆகலால் இதற்கு என்ன செய்யவேண்டும் என்பதைப் பற்றி இந்த மன்றமும் தாங்களும் இதற்குவேண்டிய உரைகள் நல்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதுசம்பந்தமாக நீங்கள் ஒரு தீர்ப்பு வழங்குவீர்கள் என்று கருதுகிறேன்.

Dr. H. V. HANDE : Sir, I am not going to speak on this. But we have given notice of a privilege motion. I would like to know whether it can be taken up straightaway so that we can discuss the whole matter.

1973 பிப்ரவரி 28]

MR. DEPUTY SPEAKER : You have to take the permission of the House.

DR. H. V. HANDE : I would like to know whether if would be taken up now.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் இவ்வளவு தூரம் சொல்லியிருக்க வேண்டியதில்லை. கேள்வி நேரத்தை ஒத்திவைத்துவிட்டு ப்ரிவிலெஜ் இஷ்யூவை எடுத்துக்கொள்ளலாம் என்று மட்டும் சொல்லியிருக்கலாம். கேள்விநேரத்தை ஒத்திவைப்பதென்றால் பேரவையின் அனுமதியை நான் கேட்க வேண்டும். கேள்வி நேரம் முடிந்தபிறகு எடுத்துக்கொள்ளலாம்.

DR. H. V. HANDE : Sir, some of us have also given notices of privilege motion. If the hon. Member, Thiru Ponnappa Nadar agrees, we can discuss the whole matter after the Question-Hour.

THIRU R. PONNAPPA NADAR : It may be taken up after Question-Hour, so that we can have a full say in the matter.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையில் தவறான முன்மாதிரியை உருவாக்கக் கூடாது. தகவல் வந்திருக்கிறது. பேரவைக்கே அறிவிக்கவில்லை. நான் அதைப் பேரவைக்கு அறிவிக்க வேண்டும். எதையும் கேள்வி நேரம் முடிந்த பிறகு எடுத்துக் கொள்வது வழக்கம். அவசரமாக ஏதாவது இருந்தாலும்கூட பேரவையின் அனுமதியோடுதான் கேள்வி நேரத்தை ஒத்திவைக்கலாம். பேரவை அனுமதித்தால்தான் எடுத்துக் கொள்ள முடியும்.

இப்பொழுது வினாக்கள்—விடைகளை எடுத்துக் கொள்கிறேன்.

2. வினாக்கள்-விடைகள்.

(வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : 176, 177 ஆகிய எண் உள்ள வினாக்கள் பின்னர் எடுத்துக்கொள்ளப்படும். இப்பொழுது 178, 179 ஆகிய இரு வினாக்களும் ஒன்றாக எடுத்துக்கொள்ளப்படுகின்றன.